## 24 நாடுகள் பங்கேற்பு! ரூ. 55 கோடி செலவில்

# சென்னை- மதுரையில் ‘ஜூனியர் ஆடவர் ஹாக்கி உலகக்கோப்பை -2025’!

## இளைஞர் நலன்– விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்புகள்!

**சென்னை, மார்ச் 29-**

**சட்டப் பேரவையில் நேற்று, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிலுரை வழங்குகையில், “இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை” தொடர்பாக முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.**

**அவை வருமாறு:-**

**1.** 24 நாடுகள் பங்கேற்கும் ஜூனியர் ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பை2025 போட்டிகள் சென்னை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் ரூ.55 கோடி செலவில் நடத்தப்படும்.

சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு நடத்தும் ஜூனியர் ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பையில் 24 அணிகள் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும். இவ்வுலகக்கோப்பை போட்டிகளில் மொத்தம் 72 போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. இப்போட்டிகள் சென்னை மற்றும் மதுரை ஆகிய இரு நகரங்களில் ரூ.55 கோடி செலவில் நடத்தப்படும்.

**2.** இளைஞர்களிடையே விளையாட்டு கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும், உடற் திறனை வளர்க்கவும் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் ரூ.45 கோடி செலவில் நடத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்களின் திறமைகளை வளர்த்தெடுக்கவும், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கவும் மற்றும் விளையாட்டு ஆர்வத்தை அதிகரிக்கவும் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழாவானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் ரூ.45 கோடி செலவில் நடத்தப்படும்.

இவ்விளையாட்டுத் திருவிழாவானது தமிழ்நாட்டின் 388 வட்டாரங்களிலும் நடத்தப்படும் போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்கள் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதி பெறுவர். இம்முயற்சி இளைஞர்களின் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர வழிவகுக்கும்.

**3.** தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விளையாட்டு வளாகங்களில் இளம் விளையாட்டு வீரர்களை ஈர்க்கும் புட்சால் (Futsal), பாக்ஸ் கிரிக்கெட் (Box Cricket) போன்ற விளையாட்டுகளுக்காக முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு மைதானங்கள் (Youth Sports Arena) ரூ.19 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

திறமைமிக்க இளைஞர்கள் ஓட்டப்பந்தயங்களில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், அவர்களது உடல் தகுதியை மேம்படுத்தவும் அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும் ரூ.19 கோடி மதிப்பீட்டில் இளைஞர்களுக்கான ஒரு விளையாட்டு மைதானம் (Youth Sports Arena) அமைக்கப்படும்.

இம்மைதானங்களில் புட்சால் (Futsal), பாக்ஸ் கிரிக்கெட் (Box Cricket) போன்ற விளையாட்டுகள் நடத்தப்படும். இதன் மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு கூடுதல் வருவாய் ஈட்டப்படும்.

**4.** மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் போது ஏற்படும் விபத்துகளினால் (இது நீண்டநாள் கோரிக்கை) உண்டாகும் உடற்காயங்கள் மற்றும் உயிரிழப்பினை ஈடுசெய்து உதவிடும் வகையில் 25000 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு காப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் 25000 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு போட்டிகளின் போது ஏற்படும் விபத்துகளினால் உண்டாகும் உடற்காயங்கள் மற்றும் உயிரிழப்பினை ஈடுசெய்து உதவிடும் வகையில் இக்காப்பீட்டுத் திட்டம் உருவாக்கப்படும்.

**5.** ஐந்து மாவட்டங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டு வரும் பாரா விளையாட்டு மைதானங்கள் (Para Sports Arenas) பாரா விளையாட்டு வீரர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதைத் தொடர்ந்து, திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் பாரா விளையாட்டு மைதானங்கள் (Para Sports Arenas) ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

பாரா விளையாட்டு வீரர்கள் பாரிஸில் நடந்த பாராலிம்பிக்ஸ் 2024இல் சிறப்பாக பங்கேற்று பல பதக்கங்களை வென்று நம் மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். அவர்களின் திறமைகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் ஏற்கனவே ஐந்து மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வரும் பாரா விளையாட்டு மைதானங்களின் (Para Sports Arenas) தொடர்ச்சியாக மேலும் ஐந்து மாவட்டங்களில் பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும்.

திருவள்ளூர், திருவண்ணாமலை, தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் தலா ரூ.1.5 கோடி வீதம் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் பாரா விளையாட்டு மைதானங்கள் (Para Sports Arenas) அமைக்கப்படும்.

**6.** சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்களின் கோரிக்கையினை ஏற்று,

I. ELITE திட்டத்தில் பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை 25 லிருந்து 50 ஆகவும்,

II. MIMS திட்டத்தில் பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை 75 லிருந்து, 125 ஆகவும்,

III. CDS திட்டத்தில் பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை 100லிருந்து 200 ஆகவும் உயர்த்தப்படும். இத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ரூ.38 கோடி நிதி ஒதுக்கப்படும்.

சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்று நமது மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், ELITE திட்டத்தில் பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை 25 லிருந்து 50 ஆகவும், MIMS திட்டத்தில் பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை 75 லிருந்து 125 ஆகவும், CDS திட்டத்தில் பயன்பெறும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை 100லிருந்து 200 ஆகவும் உயர்த்தப்படும்.

இத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ரூ.38 கோடி நிதி ஒதுக்கப்படும்.

**7.** சேலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சர்வதேச தரத்தில் 8 தடங்கள் கொண்ட செயற்கை தடகள ஓடுபாதையுடன், இயற்கை கால்பந்து புல்தரை மைதானம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சேலம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சர்வதேச தரத்தில் நீர்த்தெளிப்பான் வசதி (Sprinkler), பாதுகாப்பு வேலி, 25 மீ உயர்கம்ப விளக்குகள், தடகள மற்றும் கால்பந்து உபகரணங்கள், நீளம் தாண்டுதல் குழி மற்றும் பிற தேவையான வசதிகளுடன் 8 தடங்கள் கொண்ட செயற்கை தடகள ஓடுபாதையுடன், இயற்கை கால்பந்து புல்தரை மைதானம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**8.** World Aquatics - Olympics தரத்தில், சென்னை வேளச்சேரி AGB வளாகத்தில் உள்ள நீச்சல் மற்றும் டைவிங் குளம் (Diving Pool) ரூ.18 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

World Aquatics - Olympic தரத்தில், சென்னை வேளச்சேரியில் உள்ள AGB வளாகத்தில் 30 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ள 8தரைப்படி சர்வதேச நீச்சல் குளம் மற்றும் டைவிங் குளம் (Diving Pool) வடிகட்டும் அமைப்புடன் (50 மீ x 25 மீ) ரூ.18 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

**9.** சர்வதேச மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களின் கோரிக்கையினை ஏற்று சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விடுதி (first time in India) அமைக்கப்படும்.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளி தடகள வீரர்கள் 2024 பாரிஸ் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் வென்று நமது மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். இவ்விளையாட்டு வீரர்கள், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் முக்கிய பயனாளிகளாக உள்ளனர். அவர்களுக்கு சிறப்பான வசதிகள் வழங்கும் வகையில் பாரா தடகள வீரர்களுக்கு தடையற்ற சூழலுடன் கூடிய விளையாட்டு விடுதி சென்னையில் அமைக்கப்படும்.

**10.** மாநிலத்தில் உள்ள 40 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் (Mini Stadia) ரூ.120 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

பொதுமக்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையே ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஊக்குவிப்பதையும், சமூகத்தில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதையும் அரசு முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக 20252026ஆம் நிதியாண்டில் மாநிலத்தில் உள்ள 40 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் (Mini Stadia) ரூ.120 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கிள்ளியூர், அருப்புக்கோட்டை, திருச்சுழி, இராஜபாளையம், கம்பம், மதுரை கிழக்கு, மானாமதுரை, வேடசந்தூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, ஈரோடு மேற்கு, ராசிபுரம், திருச்செங்கோடு, சங்கரி, மணப்பாறை, குளித்தலை, திருமயம், அறந்தாங்கி, திருவிடைமருதூர், பேராவூரணி, திருவையாறு, ஒரத்தநாடு, நன்னிலம், திருத்துறைப்பூண்டி, காட்டுமன்னார்கோயில், செஞ்சி, திண்டிவனம், திருக்கோவிலூர், மதுராந்தகம், குடியாத்தம், பர்கூர், தளி, ரீபெரும்புதூர், ஆலந்தூர், பூந்தமல்லி, பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, மதுரவாயல், திரு.வி.க. நகர், பெரம்பூர் ஆகிய 40 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் (Mini Stadia) ரூ.120 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே என்னுடைய துறை குறித்த மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக மற்ற அறிவிப்புகள் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றை நான் படித்ததாக ஏற்று அவைக்குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**11.** ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2025 (Squash World Cup2025) போட்டிகள் சென்னையில் நடத்தப்படும்.

சென்னையில் ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டியானது 2023ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு மீண்டும் ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டி (Squash World Cup2025) சென்னையில் நடத்தப்படும். இவ்வுலகக்கோப்பை போட்டியில் 15 நாடுகளிலிருந்து, சிறந்த ஸ்குவாஷ் வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

**12.** eSports உலகளவில் இளைஞர்களிடையே அதிக பிரபலமடைந்துள்ளதால், சென்னை eSports உலக சாம்பியன் போட்டி (CeGC) சென்னையில் நடத்தப்படும்.

தமிழ்நாடு மாநிலமானது ஏற்கனவே eSports துறையில் முன்னணியில் உள்ளது. 2024ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு முதலமைச்சர்



கோப்பை விளையாட்டுகளில் eSports மாதிரி விளையாட்டாக சேர்க்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டில் 5000 -க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். மேலும் 2028 Los Angelesல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டில் eSports சேர்க்கப்பட்டடுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2025ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள சென்னை eSports உலக சாம்பியன் போட்டி (CeGC) யானது இந்தியாவின் முக்கிய eSports நிகழ்வாக அமையும்.

இது சென்னை மாநகருக்கு உலகளாவிய அங்கீகாரத்தை பெற்றுத் தருவதோடு, சென்னையை தெற்காசியாவின் முன்னணி eSports மையமாக மாற்றவும் வழிவகுக்கும்.

ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் (Asian Surfing Championship) போட்டியானது தமிழ்நாட்டில் நடத்தப்படும்.

தமிழ்நாடு அரசு உலக அலைச்சறுக்கு (QS3000) போட்டியை ஆகஸ்ட்2023இல் வெற்றிகரமாக நடத்தியது. தமிழ்நாடு, 1000 கி.மீக்கும் மேலான நீளமான கடற்கரையைக் கொண்டு, சர்வதேச அலைச்சறுக்கு போட்டிகளை நடத்துவதற்கான திறனைக் கொண்டுள்ளதால், இந்நிதியாண்டில் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் (Asian Surfing Championship) போட்டியானது தமிழ்நாட்டில் நடத்தப்படும்.

இப்போட்டியானது, 2026ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஆசிய விளையாட்டு போட்டிகளுக்கான அதிகாரப்பூர்வ தகுதிச்சுற்றுச் போட்டியாக கருதப்படும்.

**13.** ஆசிய இளையோர் படகோட்டுதல் சாம்பியன்ஷிப் (Asian Youth Sailing Championship) போட்டியானது தமிழ்நாட்டில் நடத்தப்படும்.

படகோட்டுதல் போட்டியானது ஒலிம்பிக் விளையாட்டு போட்டியாகும். இந்த ஒலிம்பிக் விளையாட்டில் இந்திய அணியினர் தொடர்ந்து பங்கேற்று வருகின்றனர். இவ்விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில் ஆசிய இளையோர் படகோட்டுதல் சாம்பியன்ஷிப் (Asian Youth Sailing Championship) போட்டி தமிழ்நாட்டில் நடத்தப்படும்.

இப்போட்டியில், உலகளவில் சுமார் 11 நாடுகளைச் சார்ந்த 100க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் தங்கள் படகுகளுடன் பங்கேற்க உள்ளனர்.

**14.** தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் கருத்தரங்கம் (TASCon 2.0) நடத்தப்படும்.

TASCon 1.0 கருத்தரங்கமானது கடந்த 2023 நவம்பர் 7 மற்றும் 8ஆகிய நாட்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்தியா, இங்கிலாந்து, மலேசியா, நெதர்லாந்து, கனடா மற்றும் தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சார்ந்த 250க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் மற்றும் பேச்சாளர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

TASCon 2.0இல் கருத்தரங்குடன் பயிற்சி முகாம்கள், ஆய்வறிக்கை விளக்கங்கள் மற்றும் “விளையாட்டு ஹேக்கத்தான்” (Sports Hackathon) ஆகியவை நடத்தப்படும். விளையாட்டு அறிவியலில் தமிழ்நாட்டை இந்தியாவின் முன்னணி மையமாக உருவாக்குவது இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

**15.** மாநிலம் முழுவதும் உள்ள 25 முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

மாநிலம் முழுவதும் உள்ள 25 முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் 20 முதல் 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டவை ஆகும். இவ்விளையாட்டரங்களில் கடந்த 15 ஆண்டுகளாக பெரிய அளவில் புதுப்பித்தல் பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, இத்திட்டத்தின் கீழ் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்களில், மண் தடப்பாதை பழுது சரிசெய்தல், கழிப்பிட வசதிகள், பார்வையாளர்கள் பகுதி, சுற்றுச்சுவர், நுழைவு வளைவு, மின்சாதனங்கள் உள்ளிட்ட அமைப்புகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

**16.** சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் 8 தடங்கள் கொண்ட செயற்கை தடகள ஓடுபாதை ரூ.8 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்படும்.

சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் செயற்கை தடகள ஓடுபாதை கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ச்சியான பயன்பாட்டினால் சேதமடைந்துள்ளது. எனவே, 8 தடங்கள் கொண்ட அச்செயற்கை தடகள ஓடுபாதையில் சுற்று வடிகால் வசதி, தடகளம் மற்றும் கால்பந்து உபகரணங்கள், நீளம் தாண்டுதல் குழி ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டு ரூ.8 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**17.** மதுரையில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் புதிய விளையாட்டு விடுதியானது ரூ.6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மதுரையில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 1300 சதுர அடி பரப்பளவில் புதிய G+3 விளையாட்டு விடுதி ஒன்று 100 மாணவர்களுக்கான தங்கும் வசதி, உணவறை மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்புகளுடன் ரூ.6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**18.** கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர் மாடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள நேரு விளையாட்டு வளாகம் 44 ஆண்டுகள் பழமையான பன்முக விளையாட்டு மைதானமாகும். கடந்த 44 ஆண்டுகளாக, பார்வையாளர் மாடமானது புதுப்பிக்காமல் பழுதடைந்துள்ளதால், புது பிளாஸ்டரிங் மற்றும் முழுமையான வெளிப்புற மேம்பாடுகளுடன் ரூ.5 கோடி மதிப்பீட்டில் இவ்வளாகம் புதுப்பிக்கப்படும்.

**19.** சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா நீச்சல் குளம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா நீச்சல் குளம் 40 ஆண்டுகள் பழமையான 8 தட (50 மீ x 25 மீ) பரந்த சர்வதேச தரத்திலான நீச்சல் குளமாகும். இங்குள்ள பயிற்சி நீச்சல் குளத்தினை வடிகட்டி அமைப்புடன் (Filtration Plant), முன்வயப்பட்ட கட்டமைப்பு முறையை (PreEngineered Modular System) பயன்படுத்தி FINA/World Aquatics தரத்திற்கேற்ப அமைக்க ரூ.3 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

**20.** சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கின் B மைதானத்தில் பிரத்யேக எறிதல் மையம் (Throwing Sector) ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தேசிய மற்றும் சர்வதேச தடகள விளையாட்டுப் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் தமிழ்நாடு முக்கிய இடம் பெற்று, ஈட்டி எறிதல், குண்டு எறிதல், வட்டு எறிதல் மற்றும் சங்கிலி குண்டு எறிதல் போன்ற எறிதல் விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்குகிறது.

தற்போது, கால்பந்து மைதானமானது, எறிதல் போட்டிகளுக்கும், பயிற்சி மற்றும் போட்டி மையமாக பகிர்ந்து பயன்படுத்தப்படுவதால், இரு விளையாட்டுகளின் பயிற்சி திறன் மற்றும் செயல்திறன்கள் பாதிக்கப்படுகின்றன.

எனவே, எறிதல் விளையாட்டு வீரர்களுக்காக ஒரு புதிய எறிதல் மையம் (Throwing Sector) தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கான அரங்கமாக பயன்படுத்தும் வகையில் சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கின் B மைதானத்தில் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் பிரத்யேகமாக அமைக்கப்படும்.

**21.** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி மாணவர்கள் மாநில மற்றும் தேசிய போட்டிகளில் பங்குபெற களப்பயண மானியம் (Competition Exposure Grant) வழங்கப்படும்.

மாநிலத்தில் அதிக அளவிலான விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து, அவர்கள் வெற்றிபெறும் வாய்ப்புகளை அதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதி மாணவர்கள் மாநில மற்றும் தேசிய போட்டிகளில் பங்கேற்பதற்கான பயணச் செலவு, தங்கும் வசதி, நுழைவுக்கட்டணம் மற்றும் பிற போட்டி தொடர்பான செலவுகளுக்கு களப்பயண மானியம் (Competition Exposure Grant) வழங்கப்படும்.

**22.** சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நிழல் பன்முக விளையாட்டு வசதி (Shaded Multipurpose Sports Facility) ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

சென்னை ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளுக்காக PPGI நிழற்கூரையுடன், வெளியே கோணப்பட்ட மெஷ், அக்ரிலிக் தரையமைப்பு, ஒளியமைப்புகளுடன் கூடிய இரண்டு நிலையான கூடைப்பந்து (Basketball) மைதானங்கள் மற்றும் இரண்டு கையுந்துபந்து (Volleyball) மைதானங்கள் ஆகியவை ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**23.** தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முகப்பேர் விளையாட்டு வளாகம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முகப்பேர் மேசைப்பந்து அகாடமியானது 40 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்த அகாடமியை தற்போதைய தேவைகளுக்கேற்ப நவீனமயமாக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே, தற்போதுள்ள வளாகத்தில் மொத்தம் 440 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு புதிய மேல் தளம், ஜிம் பயிற்சி வசதிகள், ஓய்வறை உள்ளிட்ட அத்தியாவசிய உட்கட்டமைப்புகள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**24.** சென்னையில் அயர்ன்மேன் சேலன்ஞ் (IRONMAN Challenge) போட்டி நடத்தப்படும்.

அயர்ன்மேன் சேலன்ஞ் (IRONMAN Challenge) போட்டியானது நீச்சல், சைக்கிள் மற்றும் ஓட்டம் ஆகிய மூன்று விளையாட்டுகளை உள்ளடக்கிய உலகின் முன்னணி டிரையத்லான் தொடராகும். இப்போட்டியானது அடுத்த நிதியாண்டில் சென்னையில் நடத்தப்படும்.

அயர்ன்மேன் சேலன்ஞ் (IRONMAN Challenge) விளையாட்டுப் போட்டியினை நடத்துவதன் மூலம் சென்னை நகரத்தின் புகழை உலகெங்கும் உயர்த்தி, முதன்மையான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு முக்கிய இடமாக சென்னையினை மாற்ற உதவும்.

**25.** சென்னை கோபாலபுரத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமியில் (Kalaignar Centenary Boxing Academy) விளையாட்டு விடுதி ரூ.3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னை, கோபாலபுரத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமியில் பயிற்சி பெறும் விளையாட்டு வீரர்களின் பயிற்சி மற்றும் செயல்திறனை மேம்படுத்தி குத்துச்சண்டை விளையாட்டை வளர்ச்சியடையச் செய்யும் வகையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு விடுதி அமைக்கப்படும்.

**26.** இளைஞர்களை சமூக நலன் மற்றும் முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவதற்காக, தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்துகளில் இளைஞர் குழுக்கள் (Youth Clubs) ஏற்படுத்தப்படும்.

இளைஞர்களை ஒருங்கிணைத்து, சமூக நலனுக்கும், முன்னேற்றத்திற்கும் பயன்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்துகளில் இளைஞர் குழுக்கள் (Youth Clubs) ஏற்படுத்தப்படும்.

**27.** தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்காக CCTV கேமராக்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமானது விளையாட்டு மற்றும் உடற்கல்வியியல் கல்வி மற்றும் தரத்தை மேம்படுத்துவதில் தனித்துவமான பங்கு வகிக்கிறது. மேலும் இது விளையாட்டு மற்றும் விளையாட்டு அறிவியலில் வளர்ச்சிக்கு முதன்மை நிலை மையமாக திகழ்கிறது. இப்பல்கலைக்கழகத்தில் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புகளை உறுதிப்படுத்துவதற்கு CCTV கேமராக்களை நிறுவுதல் மற்றும் இணைய இணைப்பை மேம்படுத்துதல் ஆகியவை அவசியமாகின்றது. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு இணைய இணைப்பு மற்றும் CCTV கேமராக்களை நிறுவுவதற்கு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**28.** தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் புட்சால் (Futsal), பாக்ஸ் கிரிக்கெட் (Box Cricket) போன்ற விளையாட்டுகளுக்காக முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு மைதானம் (Youth Sports Arena) ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாணவ மாணவிகள் பல்வேறு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கும், அவர்களுடைய செயல் திறனை மேம்படுத்த புட்சால் (Futsal), பாக்ஸ் கிரிக்கெட் (Box Cricket) போன்ற விளையாட்டுகள் நடத்துவதற்கு ஏதுவாக உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைகழகத்தில் முதலமைச்சரின் இளைஞர் விளையாட்டு மைதானம் (Youth Sports Arena) ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**29.** நாட்டு நலப்பணித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் சிறப்பு முகாம்களுக்கு தொடர் செலவினமாக வழங்கப்படும் நிதி ரூ.1 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

நாட்டு நலப்பணித் திட்டம், தன்னார்வலர்களின் சமூக சேவைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதுடன், ஆண்டுதோறும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய சிறப்பு செயல்பாடுகளுக்கு நாட்டு நலப்பணித் திட்ட அமைப்பிற்கு தொடர் செலவினமாக வழங்கப்படுகின்ற நிதி ரூ.1 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

**30.** செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ள நிரந்தர பயிற்சி முகாம் பகுதியில் தேசிய மாணவர் படை மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நீர்பெயர் கிராமத்தில் உள்ள நிரந்தரப் பயிற்சி முகாம் பகுதியானது, வட தமிழகம் முழுவதும் உள்ள தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ஆண்டு முழுவதும் பயிற்சி வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த பயிற்சி முகாமில் நுழைவாயில் மற்றும் பின்புறத்தில் பாதுகாப்புக் காவலர் அறைகள், மாணவியர்களின் பாதுகாப்பிற்காக வரையறுக்கப்பட்ட பயிற்சிப் பகுதி மற்றும் அனைத்து சாளரங்களிலும் அலுமினியத்தால் வேயப்பட்ட கொசுவலை சட்டங்கள் அமைத்தல் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**31.** தேசிய மாணவர் படை இயக்குநரகம் மற்றும் அதன் அலகுகளின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூ.43.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

தேசிய மாணவர் படை இயக்குநரகத்தின் கீழ் 5 குழு தலைமை அலுவலகங்கள் மற்றும் 51 அலகுகள் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களில் தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக கணினிகள் மற்றும் அச்சுப்பொறி இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூ.43.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.